4th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாசில்தாரோ மற்ற அதிகாரி களோ வசூலிக்கவில்லை. வருவதைப் பெற்றுக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும். மாணவர்கள் வசூலித்தது எவ்வளவு, தொழிலாளர்கள் வசூலித்தது எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த மாநிலத்திலே இவ்வளவு பெரிய தொகையைக் காங்கிரஸ்காரர்கள்தான் மாவட்ட வாரியாக முயற்சி எடுத்து வசூலித்திருக்கிறார்கள்; எதிர்க்கட்சியினர் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி விஷயங்களை எல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் மன்றத்திற்கு வெளியே பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

* 175 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று பாதுகாப்பு நிதி அரசாங்க அலுவலர்களால் வசூலிக்கப்பட்டதா ?

(இ) அதன் மூலம் வசூலான தொகை மாவட்டவாரியாக எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : பாதுகாப்பு நிதியைக் குறிப்பிட்ட அதிகாரிகள்தான் வாங்கவேண்டும்; அமைச்சர்களோ, தலிப்பட்டவர்களோ பாதுகாப்பு நிதி வசூலிக்கும்போது அந்தந்த மாவட்ட கலெக்டரின் அனுமதி பெற்றுத்தான் வசூலிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. காங்கிரஸ் தலைவர் அவர்கள் முன்னிலையிலே நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாகவே அரசாங்கம் அனுமதி கொடுத்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பணம் கொடுக்கிறவர்கள் யாரிடத்தில் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் ரசீது கொடுக்க முடியாது. யார் பெற்றாலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து ரசீது வாங்கி அனுப்ப வேண்டும் என்பதுதான் முறை.

* 176 கேள்வி:—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசீய பாதுகாப்பு நிதி என்ற பெயரால் பல்வேறு நபர்களாலும் வசூலிக்கப்படும் தொகையைச் சரிவரக் கணக்கில் கொண்டு வர அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(இ) அவ்வாறு கணக்கில் வராத தொகைகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

[4th March 1966

THE HON. SRI. M. BHAKTAVATSALAM: (*a*) The Director of Treasuries and Accounts has been appointed as the Administrator, National Defence Fund in this State for accounting all contributions made towards the National Defence Fund. The Administrator, all District Collectors, Revenue Divisional Officers, Tahsildars, Independent Deputy Tahsildars, Panchayat Union Commissioners, and Municipal Commissioners have been authorised to receive the contributions made by the members of the public.

In respect of contributions tendered by the public to the Governor, Chief Minister and Ministers, arrangements are made for the transmission of contributions to the Administrator who will account for them. The contributions in cash are remitted by the receiving authorities to the Administrator through Government drafts. Acknowledgment receipts are being given for every contribution received by the authorities who have been authorised to receive contributions. The Government have also ordered that hundi collections should be made only through authorised hundis distributed by the Collectors.

(*b*) No person was arrested in this State for not bringing to account the collections towards National Defence Fund.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஒரு சமயம் ஒரு செய்தி வந்தது. திருவல்லிக்கேணியில் யாரோ ஒருவர் வசூலிக்கப்பட்ட நிதிக்குச் சரியான கணக்குக் காட்டாததால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதைப் பற்றிய தகவல் அரசாங்கத்திடம் இருக்கிறதா? இருந்தால் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

திரு. கே. ஏ. மதியழகன்: பணம் வசூலிப்பதில் தவறு நேர்ந்ததின் காரணமாகக் கைது செய்யப்படவில்லை என்பதைப் பற்றி மட்டும் சொன்னார்கள். பணத்தை வசூலித்து பல பேர் தாங்களே வைத்துக் கொண்டார்கள் என்று ஏதேனும் புகார்கள் வந்தனவா? அவற்றைப் பற்றிய விவரம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் தகவல் ஒன்றுமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67—(*cont*).

* திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்து அதற்காக நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களால் 'இது வரி இல்லாத